2005 பிப்ரவரி 2]

6—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***23119—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட சிக்கப்பூவத்தி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி புதியதாகத் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-லே தமிழகத்தினுடைய முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, விவசாயிகள் பெற்ற கடனுக்குண்டான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை, 311 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்கு வாழ்வளித்தவர், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; அவர்களுடைய அரசு. கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 17 ஊராட்சிகளுக்கு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த 17 ஊராட்சிகளிலும் குறைந்தபட்சம் ஒன்றேகால் இலட்சம் மக்கள் வசிக்கின்ற காரணத்தினால், சிக்கப்பூவத்தியை மையமாகக் கொண்டு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தொடங்கி, அந்தப் பகுதி மக்களுடைய விவசாயத்தைப் பெருக்க, வாழ்வளிக்க அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2005 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெல்லாரம்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டின் எல்லையில் சிக்கப்பூவத்தி கிராமம் அமைந்துள்ளது. சிக்கப்பூவத்தி கிராமத்தின் பரப்பளவு 493.73 எக்டேர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 184.74 எக்டேர் ஆகும். பெல்லாரம்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் சிக்கப்பூவத்தி கிராமம் அமைந்துள்ளது. மேலும், சிக்கப்பூவத்தி கிராமத்திற்கு அருகிலுள்ள ஆலம்பட்டியில் Bank of India வங்கியின் கிளை ஒன்றும், தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. மேலும், புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட வேண்டுமெனில், NABARD வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 2,000 எக்டேர் இருக்க வேண்டும்; மற்றும் ஆண்டு ஒன்றிற்கு குறுகிய காலப் பயிர்க் கடன் ரூ.10 இலட்சம் வரை வழங்க வாய்ப்பு இருக்க வேண்டும். மேலும் அதன் வாழ் திறனை உறுதிப்படுத்திக்கொள்ள, அதன் கடன் பணிகளை பன்முகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்க வேண்டும். ஆனால், சிக்கப்பூவத்தி கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு மற்றும் ரூ.10 இலட்சம் குறுகிய காலக் கடன் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையிலும், தொடங்கப்படும் புதிய வங்கி வளர்ச்சி அடைவதற்குப் போதிய வாய்ப்புகள் இல்லாத நிலையிலும் சிக்கப்பூவத்தி கிராமத்தில் புதியதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க வாய்ப்புகள் இல்லை.

முற்பகல் 10-35

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிக்கப்பூவத்தி ஊராட்சியில் 2,000 எக்டேர் பாசனப் பரப்பு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆலப்பட்டி, வெலகலஅள்ளி, பெல்லாரம்பள்ளி, செம்படமுத்தூர் போன்ற ஊராட்சிகளைச் சேர்த்து, சிக்கப்பூவத்தி ஊராட்சியை மையமாகக் கொண்டு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பே பெல்லாரம்பள்ளி

2005 பிப்ரவரி 2]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கிராமங்களை எல்லையாகக் கொண்டுதான் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. ஆகவே, சிக்கப்பூவத்தி கிராமத்தை அதிலிருந்து பிரித்து, தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் கவனத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 7, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

7—

குடமுழுக்கு

***44619—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலுள்ள பெருமாள், சிவன் மற்றும் முத்துமாரியம்மன் ஆகிய கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம் மற்றும் நகர் அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆகிய இம்மூன்று திருக்கோயில்களும், புதுக்கோட்டை அருள்மிகு மனோன்மணியம்மன் திருக்கோயிலின் தொகுப்புக் கோயில்களாகும். இத்திருக்கோயிலுக்கு மிகக் குறைந்த அளவே வருவாய் பெறப்படுகிறது. இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய சுமார் 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் கிராமப்புறத்தில் அமைந்துள்ளதால் திருப்பணிக்குத் தேவையான